**OS.No.67/2024**
**PW 2 : நவநீதம்.**
நாள் 08.07.2026.
**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில் –**

இந்த வழக்கு எதற்காக நடக்கிறது என்றால், இரண்டு பிள்ளைகளுக்கு எழுதாமல் என் கணவர் ஒரு பிள்ளைக்குஎழுதுவிட்டார். அதனால் வழக்கு நடக்கிறது. என் இளைய மகன் செல்வராஜ் பெயருக்கு எழுதிவிட்டார். எனது மூத்த மகன் பெயர் முரளி. அவர் சென்னையில் செல்போன் கவர் விற்கும் வியாபாரம் செய்கிறார் என்றால், ஆமாம், நடைபாதையில் வைத்து வியாபாரம் செய்கிறார். முரளி தன் குடும்பத்துடன் சென்னையில் வசிக்கிறார் என்றால், சரிதான், வாடகை வீட்டில் வசிக்கிறார். நான் எடக்குப்பத்தில வசிக்கிறேன். நானும், என் கணவரும் ஒன்றாக வசிக்கிறோம் என்றால், நான் தனியாக வசிக்கிறேன், என் கணவர் தனியாக வசிக்கிறார். கொரோனா காலத்தில் இருவரும் தனித்தனியாக தான் வசிக்கிறோம். எனக்கும், என் கணவருக்கும் ஏற்பட்ட விரோதம் காரணமாகதான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். வழக்கு சொத்துக்களின் விவரம் எனக்கு தெரியாது என்றால், மொத்தம் 13 சொத்துக்கள் உள்ளன். அதன் சர்வே எண்கள், விஸ்தீரனம் எனக்கு தெரியாது என்றால், தெரியாது. ஆரம்பத்தில் இந்த சொத்துக்களை எனது மாமனார் கன்னி வைத்திருந்தார் என்றால், சரிதான். எனது மாமனார் வழக்கு சொத்துக்களை எனது கணவருக்கு எழுதிகொடுத்துவிட்டார் என்றால், சரிதான். அதன் பிறகு என் கணவர் எங்கள் இளைய மகன் செல்வராஜிக்கு எழுதி கொடுத்துவிட்டார் என்றால், சரிதான். அதில் இருந்து என் இளைய மகன் செல்வராஜ் சொத்துக்களை

வைத்திருக்கிறார் என்றால், சரிதான். எனக்கும், என் கணவருக்கும் ஏற்பட்ட விரோதம் காரணமாகதான் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சொத்துக்கள் இரு பிள்ளைகளுக்கும் பாதி வர வேண்டும். என் மூத்த மகன் திருமணமானவுடன் சென்னைக்கு போய்விட்டார் என்றாலும், அங்கு வியாபாரம் செய்கிறார் என்றாலும், என்னையும், என் கணவரையும் அவர் பாதுகாக்கவில்லை என்றால், சரியல்ல, பாதுகாத்தார். என் இளைய மகன்தான் என்னையும், என் கணவரையும் பாதுகாத்தார் என்றால், என்னை பாதுகாக்கவில்லை, என் கணவரை செல்வராஜ்தான் பார்த்துக்கொள்கிறார்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

VEERA MUTHU THENMOZHE

Principal District Judge, Ranipet
Digitally signed by VEERA MUTHU THENMOZHE
Date: 2026.07.08 17:21:35 +0530

Principal District and Sessions Judge,
Ranipet